நாள்: 10.06.2025
SC 17/2021
பெயர் கல்யாணகுமார்
அ.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் மாயாண்டி அண்ணன் பொன்னையா, மாயாண்டி மகன் சௌந்தர் ஆகியோர்கள் என்னடா அப்பனும் மகனும் தவ்விக்கிட்டு வருகிறீர்கள் என தள்ளு முள்ளு செய்தார்கள் என்று தான் என் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தையை கம்பம் அரசு மருத்துவமனைக்கு நான் தான் அழைத்து சென்றேன். அங்கு நான் தான் மருத்துவரிடம் விபரம் சொன்னேன். நான் மருத்துவரிடம் ஒரு நபர் தான் என் தந்தையை தாக்கினார் என சொன்னேனா என்றால் ஒருவர் தான் என் தந்தையை குத்தினார் என சொன்னேன். கூர்மையான பொருளினால் என் தந்தைக்கு காயம் ஏற்பட்டது என சொல்லியுள்ளேன். நாங்கள் குடியிருக்கும் இடம் ஒரு இடம், கட்டிடம் கட்டிய இடம் வேறு இடம் என்றால் சரியல்ல. 20 அடி தூரம் இருக்கும். இடையில் வேறு வீடு உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் கத்தியை நீதிமன்றத்தில் காட்டியதால் அந்த கத்தியை வைத்து என் தந்தையை குத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த கத்தியை வைத்து தான் குத்தினார்கள். நான் காவல் நிலையத்தில் அன்றைய தினமே கத்தியை பார்த்தேன். புகார் கொடுக்கும் போது நான் கத்தியை பாக்கவில்லை. அதன் பின்னர் ஒரு மணி நேரம் கழித்து பார்த்தேன். கத்தியை பார்த்தால் அடையாளம் தெரியும் என்ற விபரத்தை நான் கொடுத்த புகாரிலோ, போலீசார் என்னை விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவை குத்தியவுடன் மாயாண்டி உடனே ஓடிவிட்டார் என்று சொல்லியுள்ளேன். ஒரு முறை குத்தி விட்டு ஓடிவிட்டார். மீண்டும் என் அப்பாவை குத்த முயற்சிக்கவில்லை. புகாரிலும், போலீசார் என்னை விசாரிக்கும் பொழுதும் கலாவதி, பெருமாள், அங்கு இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். பதற்றத்தில் சொல்லவில்லை. நான் பின்யோசனை செய்து பதற்றத்தில் சொல்லவில்லை என தற்சமயம் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் கலாவதியோ, பெருமாளோ இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று ஆய்வாளர் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார். என்னை வாய்மொழியாக தான் விசாரித்தார். நாங்கள் கட்டிடம் கட்டவில்லை என்றும், எதிரிகள் கடப்பாறையைக் கொண்டு கட்டிடத்ததை இடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் வரைபடத்தில்

கட்டிடம் இருப்பதாக காட்டவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் விபரம் சொல்லும் போது என் தந்தை மயக்கநிலையில் தான் இருந்தார். சம்பவம் நடந்து ஒரு 15 நிமிடத்தில் எனது நண்பர் பார்த்தசாராதி சம்பவம் இடம் வந்தார். அந்த சமயம் என் தந்தை உடலில் இருந்து இரத்தம் தரையில் சிந்திஇருந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் என் தந்தையை நடுவில் வைத்து கொண்டு செல்லும் போது என்னுடைய சட்டையிலும், எனது நண்பர் பார்த்தசாரதி சட்டையிலும் இரத்தம் படிந்ததா என்றால் இல்லை. நாங்கள் என் தந்தை குடலை துணியை வைத்து கட்டிவிட்டோம் அதனால் இரத்தம் வரவில்லை. நாங்கள் கட்டியை துணியை போலீசார் பார்த்தார்கள். அதில் இரத்தம் இருந்தது. நான் கம்பம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது மதியம் 3.00 மணி இருக்கும். மாலை 5.00 மணிக்கு மேல் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றார்கள். நாங்கள் எங்கள் வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் தான் கம்பம் வடக்கு காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனை சென்ற போது போலீசார் அங்கு இல்லை. கம்பம் அரசு மருத்துவமனையிலிருந்து என் தந்தையை தேனிக்கு அனுப்பிவிட்டு நான் சென்று புகார் கொடுத்தேன். நான் மட்டும் தனியாக சென்று தான் புகார் கொடுத்தேன். என்னுடைய புகாரில் என் தந்தைக்கு வயிற்றில் எந்தப் பகுதியில் காயம் இருந்தது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது என் அக்கா மற்றும் அவரது கணவர் காவல் நிலையம் வரவில்லை. 2ம் எதிரி சௌந்தர் காவல் துறை பணிக்கு தேர்வாகி இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பாவை தேனி மருத்துவமனனைக்கு அழைத்து சென்ற பின்னர் நான் 7.00 மணி வரை காவல் நிலையத்தில் இருந்தேன். 1ம் எதிரி அப்போது காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான். மருத்துவரிடம் என்ன ஆயுதத்தால் என் தந்தையை தாக்கினார்கள், எத்தனை பேர் தாக்கினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் 2,3 எதிரிகள் என் அப்பாவை கையைப் பிடித்துக்கொண்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், மற்றவர்கள் சொன்னதை வைத்து நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்குள் இட தகராறு இருந்தது என்பதை நிரூபிக்க பஞ்சாயத்து பேசிய நபர்களையோ, அதற்கான ஆவணத்தையோ, போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் நில அளவையரை வைத்து நிலத்தை அளந்தோம். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. புகாரில் பக்கத்து வீட்டுக்காரர்களை வைத்து நில பிரச்சனை பேசினோம் என்று சொல்லியுள்ளேன். நில அளவையரை வைத்து அளந்தோம் என்று சொல்வது

பொய்யானது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்காமல் புகார் கொடுத்துள்ளேன் என்றும், இருசக்கர வாகனத்தில் என் தந்தையை துணியை வைத்து கட்டி கொண்டு மருத்துவமனைக்கு சேர்த்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,<br>
சார்பு நீதிபதி,<br>
உத்தமபாளையம்.